நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 5–ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.310/2026
CNR.No.TNTS02-000766-2026
IN
குற்ற எண்.207/2025

குமார்,
த/பெ.அந்தோனி, ...மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல் ஆய்வாளர் அவர்கள்,
சொக்கம்பட்டி காவல் நிலையம் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது மனுதாரர் நிபந்தனையை மாற்றி அமைக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர்ருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பசும்பொன்செல்வகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**<u>உத்தரவு</u>**

1. மேற்படி வழக்கில் மனுதார்/வாகன உரிமையாளருக்கு சொந்தமான KA 51 N 1479 என்ற பதிவு எண் கொண்ட JCB வாகனத்தின் மீது சொக்கம்பட்டி காவல் நிலைய குற்ற எண். 207/2025 U/S 303(2) (sand theft) BNS act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வாகனத்தை மேற்படி காவல் துறையினர் பறிமுதல் செய்தனர் என்றும், மேற்படி வாகனத்தை தற்காலிகமாக திரும்பபெறும் வகைக்காக கனம் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி Crlmp.No.944/2025 மேற்படி வாகனத்தை இடைக்காலமாக மனுதாரிடம் ஒப்படைப்பதற்கு சில நிபந்தனைகளுடன் கூடிய உத்தரவை இந்நீதிமன்றம் பிறப்பித்து இருந்தது என்றும், மேற்படி நிபந்தனை 1–ல் மேற்படி மனுதார் மற்றும் இரு நபர்கள் ரூ 10,00,000/–சொந்த பிணைய பத்திரம் எழுதித் தரவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதார்/வாகன உரிமையாளர் இலங்கை நாட்டை சார்ந்த அகதி ஆவார் என்றும், போர்

காலங்களில் தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள தமிழ்நாட்டிற்கு தஞ்சம் அடைந்தவர்கள் என்றும், தற்சமயம் வரை தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள அகதிகள் முகாமில் அரசு கொடுத்துள்ள இலவச வீட்டில் வசித்து வரும் நிலையில் 10,00,000/– மிதிப்பிலான சொந்த பிணையப் பத்திரம் எழுதித்தர எந்த வாய்ப்பும் இல்லா நிலையில் உள்ளார் என்றும், மேலும் இரு நபர்கள் 10,00,000/– மிதிப்பிலான சொந்த பிணையப் பத்தரம் எழுதித்தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடிய பிணையப்பத்திரம் எழுதித்தர வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்படி வானத்தின் தற்போதைய சந்தை மதிப்பு 4,50,000/–மட்டுமே உள்ள நிலையில் மேற்படி 10,00,000/– மிதிப்பிலான சொந்த பிணையப் பத்திரம் எழுதித்தர வேண்டும் என்ற நிபந்தனையால் மேற்படி வாகனத்தை மனுதார்/வாகன உரிமையாளரால் ஜாமீன்தார் காட்ட இயலாத நிலையில் உள்ளார் என்றும், மேலும் மேற்படி வாகனம் நிறுத்திய இடத்திலேயே நிறுத்தப்பட்டு உள்ளதால் மேற்படி வாகனம் பழுதடைந்து இயக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது என்றும், மேற்படி வாகனம் இல்லாத காரணத்தால் தொடர்ந்து தொழில் செய்ய முடியாமல் தொழிலுக்காக வாங்கிய வங்கி கடன்களையும் அடைக்க முடியாமல் மேற்படி மனுதார் வாகனஉரிமையாளர் சூழலில் உள்ளார் என்றும், எனவே மனுதாரர் குடும்ப சூழ்நிலை மற்றும் பொருளாதார நலன் தொழில் சூழல்களை கருத்தில் கொண்டு மேற்படி 10,00,000/–மிதிப்பிலான சொந்த பிணையப் பத்திரம் எழுதித்தர வேண்டும் என்ற நிபந்தனையை குறைத்து Modification செய்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அரசு தரப்பு பதிலில், வழக்கு புலன் விசாரணையில் உள்ளது என்றும், மேலும் எதிரியிடம் வழக்கு சொத்தினை ஒப்படைத்தால் அவர் மீண்டும் இதே தவறை செய்யக்கூடும், மேலும் வழக்கு சொத்தினை விற்றுவிடவோ உருமாற்றம் செய்யவோ கூடும், மேலும் வழக்கு விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே எதிரியிடம் வழக்கு சொத்தினை ஒப்படைக்க ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது.

3. தீர்வு, இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, கடந்த 19.11.2025 அன்று பி.ஆர்.எண்.43/2026 ல் வழக்கு சொத்தான KA 51 N 1479 என்ற பதிவு எண் கொண்ட JCB வாகனத்தை தற்காலிகமாக ஒப்படைக்க நிபந்தனையின்

அடிப்படையில் உத்தரவிடப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், மனுதார்/வாகன உரிமையாளருக்கு சொந்தமான KA 51 N 1479 என்ற பதிவு எண் கொண்ட JCB வாகனத்தின் மீது சொக்கம்பட்டி காவல் நிலைய குற்ற எண். 207/2025 U/S 303(2) (sand theft) BNS act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி வாகனத்தை மேற்படி காவல் துறையினர் பறிமுதல் செய்தனர் என்றும், மேற்படி வாகனத்தை தற்காலிகமாக திரும்பபெறும் வகைக்காக கனம் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி Crlmp.No.944/2025 மேற்படி வாகனத்தை இடைக்காலமாக மனுதாரிடம் ஒப்படைப்பதற்கு சில நிபந்தனைகளுடன் கூடிய உத்தரவை இந்நீதிமன்றம் பிறப்பித்து இருந்தது என்றும், மேற்படி நிபந்தனை 1-ல் மேற்படி மனுதார் மற்றும் இரு நபர்கள் ரூ 10,00,000/-சொந்த பிணைய பத்திரம் எழுதித் தரவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதார்/வாகன உரிமையாளர் இலங்கை நாட்டை சார்ந்த அகதி ஆவார் என்றும், போர் காலங்களில் தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள தமிழ்நாட்டிற்கு தஞ்சம் அடைந்தவர்கள் என்றும், தற்சமயம் வரை தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள அகதிகள் முகாமில் அரசு கொடுத்துள்ள இலவச வீட்டில் வசித்து வரும் நிலையில் 10,00,000/- மிதிப்பிலான சொந்த பிணையப் பத்திரம் எழுதித்தர எந்த வாய்ப்பும் இல்லா நிலையில் உள்ளார் என்றும், மேலும் இரு நபர்கள் 10,00,000/- மிதிப்பிலான சொந்த பிணையப் பத்தரம் எழுதித்தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடிய பிணையப்பத்திரம் எழுதித்தர வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்படி வானத்தின் தற்போதைய சந்தை மதிப்பு 4,50,000/-மட்டுமே உள்ள நிலையில் மேற்படி 10,00,000/- மிதிப்பிலான சொந்த பிணையப் பத்திரம் எழுதித்தர வேண்டும் என்ற நிபந்தனையால் மேற்படி வாகனத்தை மனுதார்/வாகன உரிமையாளரால் ஜாமீன்தார் காட்ட இயலாத நிலையில் உள்ளார் என்றும், மேலும் மேற்படி வாகனம் நிறுத்திய இடத்திலேயே நிறுத்தப்பட்டு உள்ளதால் மேற்படி வாகனம் பழுதடைந்து இயக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது என்றும், மேற்படி வாகனம் இல்லாத காரணத்தால் தொடர்ந்து தொழில் செய்ய முடியாமல் தொழிலுக்காக வாங்கிய வங்கி கடன்களையும் அடைக்க முடியாமல் மேற்படி மனுதார் வாகனஉரிமையாளர் சூழலில் உள்ளார் என்றும், எனவே மனுதாரர் குடும்ப சூழ்நிலை மற்றும் பொருளாதார நலன் தொழில் சூழல்களை கருத்தில் கொண்டு மேற்படி

10,00,000/—மிதிப்பிலான சொந்த பிணையப் பத்திரம் எழுதித்தர வேண்டும் என்ற நிபந்தனையை குறைத்து Modification செய்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும் மனுதாரரின் மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. எனவே Cr.M.P.No.944/2025—ல் உள்ள 1வது நிபந்தனையான மனுதாரர் ரூ.10,00,000/—த்திற்கு தானும் தனி இருநபரும் சொந்த பிணை பத்திரம் எழுதி தர வேண்டும் என உள்ள நிபந்தனையை மட்டும் மாற்றி மனுதாரர் ரூ.4,50,000/—த்திற்கு சொந்த பிணை பத்திரமும், தனி இருநபரும் பிணை பத்திரம் எழுதி தர வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மேற்படி மனுவின் மற்ற நிபந்தனைகள் அவ்வாறே நீடிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் மார்ச் திங்கள் 5—ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 16:00:11 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.